**<u>நாள் 03.04.2025</u>**

**<u>DVC No. 01/2023</u>**

**ம.சா.1**

**திருமதி.மங்கம்மாள் (27)**

க/பெ. மாரிமுத்து

சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.

**<u>எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

நான் B.SC.,B.Ed படித்துள்ளேன். 1–வது எதிர்மனுதாரர் எனது கணவர் ஆவார். 2 மற்றும் 3–வது எதிர்மனுதாரர்கள் எனது மாமனார் மற்றும் மாமியார் ஆவார்கள். 4–வது எதிர்மனுதாரர் எனது கணவரின் சகோதரர் ஆவார். நான் என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால், நான் குடும்ப வன்முறை தடுப்பு சட்டதின் கீழ் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எங்களது திருமணம் இருகுடும்ப பெரியோர்கள் சம்மந்தமத்துடன் நடைப்பெற்றது என்றால் சரிதான். எனது கணவர் திருமணத்திற்கு முன்பு என்ன படித்திருந்தார் என்றால், B.E படிந்திருந்தார். திருமணத்திற்கு முன்பு எனது கணவர் வேலை செய்து வந்தாரா என்றால், பெங்களூரில் Faclity Engineer – ஆக பணிபுரிந்து வந்தார். எனது திருமணத்தின் தேதி 30.05.2018– ஆகும். எங்களது திருமணம் எங்கு நடைப்பெற்றது என்றால் பாலக்கோடு, பிக்கனஅள்ளியில் உள்ள திருசென்றாயன் கோவிலில் நடைப்பெற்றது. எங்களது திருமணத்தில் எந்த வித பிரச்சரனைகள் இன்றி நல்ல முறையில் நடைப்பெற்றது என்றால் சரிதான். திருமணத்திற்கு பின்பு நாங்கள் சவுளூர் கிராமத்தில் கணவர் இல்லத்தில் வாழ்ந்து வந்தோம். மேற்படி வீட்டில் ஆறு மாதங்களாக குடியிருந்து வந்தோம். ஆறு மாதங்களுக்காக எனது கணவர் பெங்களூருக்கு தொழில் ரிதியாக சென்றுவிட்டார், நான் எனது மாமனார் வீட்டில் வாழ்ந்து வந்தேன். நான் ஆறு மாதங்களாக கூட்டு குடும்பமாக வாழவில்லை என்றாலும், மூன்று மாதங்கள் கூட்டு குடும்பமாக வாழ்ந்து வந்தோம் என்றால் சரியல்ல. ஆறு மாதங்களுக்கு பின்பு எனது கணவர் அழைத்ததின் பேரில் நான் அவருடன் பெங்களூரில் வாழ்ந்து வந்தேன் என்றால் சரிதான். பின்பு சாட்சி தன்னிச்சையாக எனது மாமனார் வீட்டில் என்னுடன் பிரச்சனை செய்ததால் என் கணவர் என்னை பெங்களூருக்கு என்னை அழைத்து செல்லுமாறு கேட்டுக்கொண்டதன் பேரில் என்னை அழைத்து சென்றார். எனது மாமனார் வீட்டில் என்னுடன் யார் யார் எந்த தேதியில் என்ன பிரச்சனை செய்தார்கள் என்றால், தேதி ஞாபகம் இல்லை. மே மாதம் 2018–ம் வருடம் ஆகும். எனது மாமனார், மாமியார் மற்றும் எனது கணவரின் சகோதரர் பிரச்சனை செய்தார்கள், எனது கணவருக்கு திலகவதி என்ற பெண்ணுடன் தொடர்பு இருந்ததை குறித்து நான் அவரிடம் கேட்டப்போது அவர்கள் அந்த பெண் 2, 3, 4 எதிர்மனுதாரர்களுக்கு செலவுக்கு பணம் கொடுப்பதால் அது குறித்து கண்டிக்க மாட்டோம் என கூறியதின் பேரில் பிரச்சனை வந்தது. திலகவதிக்கு வயது எவ்வளவு என்றால் 42 ஆகும். அவர் எனக்கு எப்படி தெரியும் என்றால் எனது கணவர் காஞ்சிபுரத்தில் பணிசெய்தபோது மருத்து செவிலி என்ற

முறை திலகவதி என்பவருடன் பழக்கம் என்று சொன்னார். எனது கணவருக்கும், திலகவதிக்கு 15 ஆண்டுகளாக பழக்கம் என்பதற்கு ஏதேனும் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் ம.சா.ஆ.17, 1-ம் எதிர்மனுதாரரின் கைப்பேசி எண்ணுக்கு உண்டான அழைப்பானை விபரம் தாக்கல் செய்துள்ளேன். ம.சா.ஆ.17- கண்டுள்ள தொலைப்பேசி எண்.7358271062 திலகவதியின் எண் என்று நான் உறுதிச்செய்தேனா என்றால், திலகவதியின் எண் என்று நான் என் கணவர் தொலைப்பேசியில் பேசியதின்மூலம் தெரிந்துக்கொண்டேன். ம.சா.ஆ.17- கண்டுள்ள தொலைப்பேசி எண்.7904169881 எண் யாருக்கு சொந்தமான எண் என்றால் திலகவதிக்கு சொந்தமானது. எனது கணவரின் தொலைப்பேசி எண் என்ன வென்றால் 7373494853 ஆகும். என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.17 -ல் 1-ம் எதிர்மனுதாரர் தொலைப்பேசி எண் காட்டப்படவில்லை என்றால் சரிதான். 1-ம் எதிர்மனுதாரரின் தொலைப்பேசியில் Screen Shot எடுக்கும்போது அவருடைய எண் காட்டாது. நான் சொல்வது அனைத்தும் உண்மைக்கு புறமானது என்றால் சரியல்ல. எனது கணவருடன் திலகவதி என்பவர் செவிலியர் என்ற முறையில் பழக்கினரே தவிர நான் சொல்வது போல் அவர்களிடம் உறவு இல்லை என்றாலும், திலகவதி 1-ம் எதிர்மனுதாரரிடம் தாய்மை உள்ளத்துடன் தான் பழக்கினார் என்றால் சரியல்ல. எனது திருமணத்திற்கு முன்பே சுமார் 08 வருடங்களாக 1-ம் எதிர்மனுதாரருக்கும் திலகவதி என்பவருக்கு பழக்கம் உள்ளது என ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் எதும் தாக்கல் செய்யவில்லை. எனது கணவருக்கு திருமணத்தின் போது என்ன வயது என்றால் 31 வயது ஆகும். திருமணத்திற்கு முன்பு எனது கணவருக்கும் திலகவதி என்பவருக்கும் எந்தவிதமான தொடர்பு இல்லை என்றாலும் நான் வழக்கிற்காக உண்மைக்கு புறபாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. திருமணத்திற்கு பின்பு எனது கணவருக்கும் திலகவதி என்பவருக்கும் திருமணத்திற்கு முன்பே சுமார் 08 வருடமாக தொடர்பு இருப்பதாக விபரத்தை நான் எனது கணவரிடமோ குடும்பத்தாரிடமோ உறவினரிடமோ விசாரித்து தெரிந்து கொண்டேனா என்றால் தொலைப்பேசியில் அவர் பேசியதின் மூலமாகவே தெரிந்துக்கொண்டேன். நான் சொல்வது அனைத்தும், பொய்யான சங்கதி என்றாலும், நான் தான் தவறான தொடப்பு வைத்துக்கொண்டு எனது கணவருடன் வாழ விருப்பம் இல்லாமல் பொய்யான வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. திருமணத்திற்கு பின்னிட்டு மூன்று வருடங்கள் கழித்து தான் எனது கணவருக்கு திலகவதி என்ற பெண்ணுடன் தொடர்பு உள்ள விபரம் ம.சா.ஆ.17-ல் காண்டியுள்ளோன் என்றால் சரியல்ல. திருமணமாகி 2-வது நாளே மேற்படி சம்பவம் எனக்கு தெரியும். மேற்படி சங்கதி குறித்து வழக்கு மனுவிலோ, சாட்சிய பிரமாண வாக்குமூலத்திலே குறிப்பிட வில்லை என்றால் சரிதான். திருமணமாகி 2-ம் நாளே 1-ம் எதிர்மனுதாரருக்கும் திலகவதி என்பவருக்கும் தொடர்பு உள்ள விபரம் எவ்வாறு தெரிந்துக்கொண்டேன் என்றால் எனது கணவர் தொலைப்பேசியில் திலகவதியிடம் சுமார் 1 மணி நேரம் பேசியத்தை அவரிடம் விசாரித்தின் மூலம் தெரிந்துக்கொண்டேன். மேற்படி சங்கதி குறித்து எனது

மனுவிலோ சாட்சிய பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எனது மனுவில், 5-ம் பத்தியில் "அரசு மருத்துவமனையில் செவிலியாராக பணிபுரியும் திலகவதி வயது 42 என்ற பெண் தன்னை முன்னிலைப்படுத்தி கொண்டு தொந்தரவு செய்து வந்தார்" என்ற சங்கதி முற்றிலும் பொய்யான என்றால் சரியல்ல. எனது கணவருக்கும், திலகவதி என்பவருக்கும் சுமார் 15 வயது வித்தியாசம் உள்ளதால் தாய் - மகன் என்ற உறவு முறையில் பழகி வந்தார்கள் என்றால் சரியல்ல. எனது கணவருக்கு உடல் நலம் பாதிக்கப்பட்டதால் திலகவதி என்பவர் செவிலியர் என்ற முறையில் பழக்கம் ஏற்பட்டு தாய் உள்ளத்துடன் பழக்கி வந்தார் என்றால் சரியல்ல. எனது கணவருக்கும் திலகவதி என்பவருக்கும் தொடர்பு உள்ளது தொடர்பாக நான் காவல் நிலையத்தில் புகார் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். மேற்படி சங்கதி வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. இதே நீதிமன்றத்தில் என் கணவருக்கு எதிராக MC No.3/2022 தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி மனுவில் என்னை சாட்சியாக விசாரிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்பட்டு ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். பின்னிட்டு மனுவின் பேரில் சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு பத்து ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி மனு MC No.3/2022-ல் என்னை எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை என்றால் சரிதான். 16.06.2022-ம் தேதி என் கணவருக்கும் மற்றும் எங்களுக்கும் சமாதான முச்சேலிக்கா எழுத்தப்பட்டதா என்றால் சரிதான். எனது நகைகள் திரும்ப பெற எழுதிக்கொடுத்தேன். மேற்படி சமாதான முச்சேலிக்காவின்படி நான் எனது கணவரிடமிருந்து அனைத்துப்பொருட்களையும் பெற்றுக்கொண்டேனா என்றால் நகைகளை மட்டும் பெற்றுக்கொண்டேன். மேற்படி சங்கதி பொய்யானது என்றாலும் நான் அனைத்துப்பொருட்களையும் பெற்றுக்கொண்டேன் என்றால் சரியல்ல. மேற்படி சமாதான முச்சேலிக்கா-ல் நானும் எனது கணவரும் முச்சேலிக்கா ஏற்படுத்தப்பட்ட தேதிலிருந்து ஒரு வருட காலம் பிரிந்து வாழ்ந்து வருகிறேன் என்றால் சரிதான். கிருஷ்ணகிரி குடும்ப நல நீதிமன்றத்தில் என்னுடன் சேர்ந்த வாழக்கோரி OP No.133/2020 என்ற வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். பஞ்சாயத்தார்கள் பேச்சு வார்த்தை மூலம் சமாதானம் ஏற்பட்டதால் மேற்படி வழக்கு திரும்ப பெறப்பட்டது. சமாதானம் ஏற்பட்டு, நானும் எனது கணவரும் சேர்ந்து வாழ்ந்த சமயத்தில் எங்களுக்கு பெண் குழந்தை பிறந்து என்றால் சரிதான். குழந்தை கருவுற்ற சமயத்தில் முதல் 07 மாதங்கள் நான் எனது கணவருடன் பெங்களூரில் வாழ்ந்து வந்தேன். 2-ம் குழந்தை பிறந்த பிறகு நான் எனது தாயார் வீட்டிற்கு சென்ற காரணத்தினால் எனது கணவர் கிருஷ்ணகிரி குடும்ப நல நீதிமன்றத்தில் அவருடன் சேர்ந்த வாழக்கோரி OP No.188/2022 வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி வழக்கு இரு தரப்பு விசாரணைக்கு பிறகு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது கணவர் 28.06.2023-ம் தேதி சுகஸ்ரீ என்பவரை 2-ம் திருமணம் செய்து கொண்ட காரணத்தினால் தான் மேற்படி வழக்கு

தள்ளுப்படி செய்யப்பட்டது என்றால் சரிதான். நான் சுகஸ்ரீ என்ற பெண்ணை எனது கணவரை திருமணம் செய்து கொள்ளுமாறு துண்டியதின் பேரில் தான் 2-ம் திருமணம் செய்துக் கொண்டார் என்றால் சரியல்ல. 2, 3, 4 எதிர்மனுதாரர்கள் என்னை எந்த தோந்தரறும் செய்யவில்லை என்றால் சரியல்ல, 2, 3, 4 எதிர்மனுதாரர்கள் என்னிடம் 15 இலட்சம் வரதட்சனை கேட்டு என்னை தொந்தரறு செய்யவில்லை என்றால் சரியல்ல. மேற்படி 15 இலட்சம் 1-ம் எதிர்மனுதாரருக்கு செலுத்த வேண்டி தொகையை தான் கேட்டார்கள் என்றால் சரியல்ல. மேற்படி சங்கதி தவறானது என்றால் சரியல்ல. மனு பத்தி 13-ல் சொல்லியுள்ள சங்கதிகள் முற்றிலும் பொய்யான சங்கதிகள் என்றால் சரியல்ல. மேற்படி சங்கதிகள் குறித்து நான் மனுவில் தேதி, மாதம், வருடம் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். 2, 3 எதிர்மனுதாரர்கள் மனுதரருடன் நான் வாழ்ந்த மூன்று மாத காலத்தில் மனுவில் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் நடைப்பெறவில்லை என்றால் சரியல்ல. நான் என் கணவரை பழி வாங்க வேண்டும் எண்ணத்தில் 2, 3, 4 எதிர்மனுதாரர்கள் மீது பொய்யான சங்கதிகள் கொண்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் என் கணவர் மீது 2019 முதல் 27.01.2022 வரை பல்வேறு காவல் நிலையத்தில் 5 மனுக்கள் தாக்கல் செய்து தொந்ததரவு செய்தீர்கள் என்றால் சரியல்ல. கிருஷ்ணகிரி குடும்ப நல நீதிமன்றத்தில் எனது கணவர் விவாகரத்து கோரி வழக்கு OP No.51/2024 வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். எனது கணவர் என் மீது தருமபுரி, முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் குழந்தைகளின் காடியன் பொறுப்பு கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். நான் எனது கணவருடன் வாழ விருப்பம் இல்லாமல் பொய்யான சங்கதிகள் கொண்டு இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கு பரிகாரத்தில் ரூ.25 ஆயிரம் ஜீவானாசமும், நஷ்டு ஈடுடாக கோரி தாக்கல் செய்துள்ளது செல்லதக்கது என்றால் சரியல்ல. மனுவில் கூறப்பட்டுள்ள பரிகாரங்கள் 1 முதல் 4 பொய்யாக சொல்லப்பட்டவை என்றாலும் இந்த வழக்கு தள்ளுபடி செய்ய கடமைப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. எனது கணவருடன் நான் சேர்ந்து வாழ விருப்பமில்லாத காரணத்தினால் இம்மனு நிலைக்க தக்கதுஅல்ல என்றால் சரியல்ல. 2019-ம் வருடம் 2, 3, 4 எதிர்மனுதாரர்களுக்கு எதிராக குடும்ப வன்கொடுமை தடுப்பு சட்டதின் கீழ் எந்த மனுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 2, 3, 4 எதிர்மனுதாரர்கள் மீது 5 வருட கால தாமதற்கு பிறகு இம்மனு தாக்கல் செய்யப்பட்ட காரணத்தில் பாரிகாரம் கிடைக்கத்தக்க அல்ல என்றால் சரியல்ல.

Taken down by me/before me in Open Court. Read over/interpreted to the witness and acknowledged by him/her to be correct.

S/d. G.Ajay Vikresh Kumar, B.B.A.,LLB.,(Hons)
Judicial Magistrate
Palacode.